# ශ්‍රී ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,588—1965 දෙසැම්බර් 17 වෙනි සිකුරාදා—1965.12.17

14,588 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## மகாதேசாதிபதியின் பிரகடனங்கள்

ம. தே. கா. இல. எண். 111/65.

இலங்கைத் தீவினதும் அதனைச் சார்ந்த நாடுகளினதும் மகாதேசாதிபதியும் முதற்பெரும் படைத்தலைவரும், பிரித்தானிய ஏகாதிபத்திய அதி உத்தமவரிசை உறுப்பினரும் ஆகிய அதி உத்தமராம் விலியம் கொபல்லவ அவர்களிடமிருந்து:

(முத்திரை)

டபிள்யூ. கொபல்லவ.

திருவாளர் நில எனியாஸ் த சில்வா விஜேசேகர அவர்களுக்கு ;

வாழ்த்துக்கள் :

இதன் கண்ணே பின்னர் குறிப்பிடப்படுகின்ற நோக்கங்களுக்கென ஆணைக்குழு ஒன்றனை நியமித்தல் அவசியமானதென எனக்குத் தோன்றுகின்றபடியால் ;

மகாதேசாதிபதி விலியம் கொபல்லவ ஆகிய நான் உங்களின் விவேகம், திறமை, நேர்மை என்பவற்றில் நம்பிக்கையும் உறுதியும் கொண்டு (393 ம் அத்தியாயமான) விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 2 ம் பிரிவினைப் பின்பற்றி குறிப்பிடப்பட்ட திருவாளர் நில எனியாஸ் த சில்வா விஜேசேகர ஆகிய உங்களைப் பின்வரும் விஷயங்களைப் பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காகவும் உங்களால் விசாரிக்கப்பட்ட விஷயங்களைப் பற்றி ஆலோசனையளிப்பதற்காகவும் எனது ஆணைபெற்றோராக இத்தால் நியமிக்கிறேன்.

அவ்விஷயங்களாவன :—

(1) 1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏழாம் தேதி அளவில் பேராதனை இலங்கைப் பல்கலைக்கழகத்தில் மாணவர் கூட்டத்தினருள் ஒரு பகுதியினரை வேலைநிறுத்தம் செய்யத் தூண்டிய காரணங்கள்,

(2) 1965, டிசம்பர் 11 ம் தேதியன்று பல்கலைக்கழக அதிகாரிகள் பொலிசு உதவியை நாட ஏவிய நிகழ்ச்சிகளும் செயல்களும்,

(3) மேற்படி வேலைநிறுத்தமானது இலங்கைப் பல்கலைக்கழகத்து மாணவர் கூட்டத்தினரல்லாத எவரேனும் ஆளால், ஆட்கள் குழுவினரால் அல்லது தாபனத்தினால் உந்தப்பட்டதா தூண்டப்பட்டதா அல்லது உற்சாகமளிக்கப்பட்டதா என்பதும், அப்படியாயின் அதற்குப் பொறுப்பாளோர் யாவர், என்ன நோக்கங்கொண்டு செய்யப்பட்டன என்பதும்,

(4) பேராதனை இலங்கைப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்துக்குப் பொறுப்பாகவுள்ள அதிகாரிகளின் நிருவாகச் சீர்கேடு அல்லது கடமையிற் கவலையீனம் எதுவேனும் வேலைநிறுத்தத்திற்கேனும் அது தொடர்ந்திருந்து வருவதற்கேனும் முழுவதாக அல்லது ஓரளவு காரணமாகவுள்ளதா என்பது,

(5) எதிர்காலத்தில் இத்தகைய நிலைமைகள் எழாது தவிர்ப்பதற்கு கையாளப்படவேண்டிய மாற்று நடவடிக்கைகள் யாவை,

(6) மேலே குறிப்பிடப்பட்ட விஷயங்களுடன் தொடர்புடையதாய் அல்லது அவற்றின் விளைவானதாய் உங்களால் முறைப்பாடுகள் பெறப்படும் வேறேதேனும் விஷயம், என்பன.

குறிக்கப்பட்ட ஆணைபெற்றோராகிய உங்களுக்கு தேவையானவையெனத் தோன்றும் அத்தகைய எல்லா விசாரணைகளைச் செய்யுமாறும் ஆய்வுகளை நடாத்துமாறும் இத்தால் உங்களுக்கு அதிகாரமும் தத்துவமும் அளிப்பதோடு உங்களின் கைப்பட உங்களின் விசாரணைகளின் பலன்களையும் ஆலோசனைகளையும் எடுத்துக் காட்டும் ஓர் அறிக்கையை 1966, சனவரி பதினேழாம் தேதிக்கு முன்னர் எனக்கு அனுப்பிவைக்குமாறும் இத்தால் பணிக்கிறேன்.

மேற்குறிப்பிடப்பட்ட விசாரணையானது, நடவடிக்கைகள் அந்தரங்கமாக எடுக்கப்படுதல் அவசியமானது அல்லது விரும்பப்படத்தக்கது என நீங்கள் கருதுமிடத்தன்றி, பகிரங்கமாக நடாத்தப்படுதல் வேண்டுமென இதனால் பணிக்கிறேன்.

உங்களுடைய விசாரணைகளினதும் ஆய்வுகளினதும் நோக்கங்களுக்காக உதவி அல்லது விபரம் கோரப்படும் எல்லா உத்தியோகத்தர்களையும் வேறு ஆட்களையும் அதன் சார்பில் முறைப்படி புரியப்படக்கூடிய அத்தகைய எல்லா உதவிகளையும் புரியுமாறும், அளிக்கப்படக்கூடிய அத்தகைய எல்லா விபரங்களையும் அளிக்குமாறும் இத்தால் கட்டளையிட்டுப்பணிக்கிறேன்.

கொழும்பில் இத்தீவின் இலச்சினையின் கீழ் ஆயிரத்துத் தொளாயிரத்து அறுபத்தைந்தாம் ஆண்டு, டிசம்பர் மாதம் பதினேழாகிய இன்று அளிக்கப்பட்டது.

அதி உத்தமனுரின் கட்டளைப்படி,
எல். டி. எச். டி. சில்வா,
மகாதேசாதிபதியின் செயலாளர்க்காக.


இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.